# சென்னை மாநகராட்சி

CORPORATION OF CHENNAI

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 21 இதழ் : 1100 நாள் : 12 – 11 – 2015

க.து.ந.க.எண்.பி7/ 1861 / 2015

சென்னை மாநகராட்சி
கட்டடத்துறை

**e-மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்க்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்), அவர்களால் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.) | முன் வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் பதிவு நிலை | ஒப்பப்படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | **க.து.ந.க.எண்.பி7/ 1861 / 2015** மண்டலம்–7, வார்டு–90, பாடி குப்பம் பிரதான சாலையில் தரை தளத்தில் சத்துணவு கூடம் மற்றும் முதல் தளத்தில் வார்டு அலுவலகம் – 90 கட்டும் பணி. | 42,75,958/– | 42,800/– | வகுப்பு –2 மற்றும் அதற்கு மேல் | 23.11.2015 அன்று மாலை 3.00 மணி வரை |

1. ஒப்பப்படிவங்கள் http://tntenders.gov.in மற்றும் www.chennaicorporation.gov.in ஆகிய இணையதளம் மூலம் **23.11.2015 அன்று 3.00 மணி வரை** இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் **23.11.2015 அன்று மாலை 3.00 மணிக்கு முன்னதாக** இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **23.11.2015 அன்று மாலை 3.30 மணிக்கு** ரிப்பன் மாளிகை கட்டடத்துறை அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும்.

3. ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து வரைவு காசோலை பெற்று அரக்கிட்டு தனி உறையில் வைத்து ஒப்ப நாளன்று சமர்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பம் ஏற்கப்பட மாட்டாது.

4. ஒப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கும் பொழுது பிணை வைப்புத் தொகை காசோலையின் நகலினை (Scanned Copy) இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்பு தொகைக்கான காசோலை சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும். கொடுக்கப்படும் காசோலையின் காலம் 90 நாட்களுக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும். காசோலையை தனி உறையில் ஒப்பம் திறக்கப்படும் நாளன்று சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும். நிர்வாக காரணங்கள் ஏதேனும் இருப்பின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யும் உரிமை அலுவலருக்கு உள்ளது.

**மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்)**